# பழைய ஏற்பாட்டில் உள்ள நிழல் (THE SHADOW OF THE OT)

Thursday Bible Study
ACA Avadi Church
04 April 2024

**சங்கீதம் 119:18**

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.

**வேதத்தை வாசித்து புரிந்து கொள்ள வேண்டும்:**

**எபேசியர் 3:3-5**

3. அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே
சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு
உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி
அறிவித்தார். 4. இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். 5. அதை
நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை
அறிந்துகொள்ளலாம்;

**வேதத்தை நாம் ஒரு ஒருங்கிணைந்த கதையாக படிக்க வேண்டும்:**

- **சிருஷ்டிப்பு :** காரியங்கள் எப்படி இருந்தது என்பதை விளக்குகிறது.
- **விழுகை :** காரியங்கள் எப்படி இருக்கின்றன என்பதை விளக்குகிறது
- **மீட்பு :** காரியங்கள் எப்படி இருக்க முடியும் என்பதைக் காண்பிக்கிறது.
- **மறுசீரமைப்பு :** காரியங்கள் எப்படி இருக்கும் என்பதைக் காண்பிக்கிறது.

**நாம் ஏன் பழைய ஏற்பாட்டை நிராகரிக்கக் கூடாது? (தவிர்க்கக் கூடாது)**

**மத்தேயு 13: 51–52.**

51. பின்பு, இயேசு அவர்களை நோக்கி: இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களா என்று
கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம், அறிந்துகொண்டோம், ஆண்டவரே, என்றார்கள். 52.
அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இப்படியிருக்கிறபடியால்,
பரலோகராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன்
பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற
வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்.

**பவுல் எபேசுவிலுள்ள மூப்பர்களுக்கு...**

**அப்போஸ்தலர் 20:25–27**

25. இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப்
பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப்
பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன். 26. தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும்
நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, 27.
எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை
இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்.

**ஏன் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு பழைய ஏற்பாடு முக்கியமானது?**

1. பழைய ஏற்பாடு நமது வேதத்தில் நான்கில் மூன்று பங்கு கொண்டுள்ளது (75.55%).
2. பழைய ஏற்பாடு தான் "உலகம், மனிதர்கள், சுவிசேஷம்," போன்றவற்றின் ஆரம்பத்தையும் தோற்றத்தையும் உள்ளடக்கி உள்ளது.

ஆதலால் பழைய ஏற்பாடு பற்றியதான சரியான அறிவு இல்லாமல் கிறிஸ்தவர்கள் பின்வருவனவற்றில் அறியாமையின் இருளில் விடப்படுகிறார்கள்.

3. புதிய ஏற்பாடு (முழுவதும்) பழைய ஏற்பாட்டின் மீது சார்ந்துள்ளது:.

பவுலின் நிருபங்கள் பழைய ஏற்பாட்டின் வசனங்களால் நிரப்பப்பட்டுள்ளன.

• முழுமையான யூத வேதாகம பதிப்பு 183 பழைய ஏற்பாட்டு வசனங்களை பவுல் தன்னுடைய எழுத்துக்களில் மேற்கோள் காட்டியும் பொழிப்புரையாகவும் பயன்படுத்தியுள்ளார் என்று சுட்டிக் காட்டுகிறது.

4. பழைய ஏற்பாடுதான் இயேசுவின் ஒரே வேதமாக இருந்தது:
5. பழைய ஏற்பாடு ஆதித் திருச்சபையின் ஒரே வேதமாக இருந்தது.
6. பழைய ஏற்பாட்டில் இயேசு மறைந்திருக்கிறார், புதிய ஏற்பாட்டில் இயேசு வெளியரங்கமாய் இருக்கிறார்.
7. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் நாம் ஒரே தேவனையே சந்திக்கிறோம்.

• தேவன் தனது மீட்பின் திட்டத்தை பழைய ஏற்பாட்டில் முன்னமே ஏற்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தின் மூலம் நமக்கு கற்பித்தார்.

• வருகிற காரியங்களுக்கு நிழலாட்டமாக தேவன் பழைய ஏற்பாட்டில் மனிதர்கள், சம்பவங்கள், ஏற்படுத்தப்பட்ட சம்பிரதாயங்கள், (கட்டமைப்பு) வாயிலாக தேவன் தமது மீட்பின் திட்டத்தை நமக்கு கற்பித்தார்.

**கொலோசெயர் 2:16-17**

16. ஆகையால், போஜனத்தையும் பானத்தையும்குறித்தாவது, பண்டிகைநாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. 17. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது.

• உதாரணமாக ,மோசேயின் அமைப்பு என்பது தேவ மக்களை தெய்வீக காரியத்தில் பயிற்சி அளிப்பதிலும் மற்றும் எதிர்காலத்தில் வரப்போகிற யதார்த்தமான காரியங்களை (சம்பவங்களை) எதிர்நோக்கும் படியாக அவர்களுக்கு போதிக்கிற ஒரு மழலையர் பள்ளியைப் (ஆரம்ப நிலை) போல் இருந்தது.

**சாயல் - நிழல் – மாதிரி**

**எபிரெயர் 8:1-6**

1.மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், 2. பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ்செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு. 3. ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான்; ஆதலால் செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது. 4. பூமியிலே

அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார்; ஏனெனில், நியாயப்பிரமாணத்தின்படி காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்கள் இருக்கிறார்களே; 5. இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணப்போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார். 6. இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்.

- **நிழல் - ஒரு மேலோட்டமான முன்னோட்டம்:**

**எபிரெயர் 10: 1-5**

இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. 2. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப்பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா? 3. அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. 4. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே. 5. ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்;

- **சாயல்**

**எபிரெயர் 9:23**

ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே.

- **ஒப்பனை.**

**எபிரெயர் 9:9-10**

9. அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம். 10. இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல.

- **முன் அடையாளம்**

**ரோமர் 5:14**

14. அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்.

• சிலர் கிட்டத்தட்ட பழைய ஏற்பாட்டில் உள்ள ஒவ்வொரு நபர்களையும் சம்பவங்களையும் முன்னடையாளமாக ஏற்படுத்துகிறார்கள்.
• இத்தகைய விளக்க முறையானது குழப்பத்திற்கும், தேவனுடைய வார்த்தையை தவறாக புரிந்து கொள்வதற்கும் வழி வகுக்கிறது.
• ஒவ்வொரு பத்தியிலும் உள்ள மறைமுகமான அர்த்தங்களை ஆராய்வதினாலும் மற்றும் முன் அடையாளமான போதனை முறைமையை நிர்பந்திப்பதினாலும் ( கட்டாய போதனை) இவைகள் வேத சத்தியத்தின் ஆரோக்கியமான உபதேசங்களுக்கும் நேரடியான (வெளிப்படையான) போதனைகளுக்கும் ஆபத்தை இதுவரை விளைவித்துள்ளது.
• வேதத்தில் தெய்வீக நோக்கத்தோடு சொல்லப்பட்ட ஒவ்வொரு முன் அடையாளமும் (மாதிரியும்) குறைந்தபட்சம் இரண்டு அல்லது மூன்று தேவ வார்த்தையில் உள்ள வெளிப்படையான (நேரடியான) கூற்றின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது

"இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாயில்" என்பது மற்ற விஷயத்தைப் போலவே இந்த விஷயத்திற்கும் பொருந்தும் (உபாகமம் 19:15, மத்தேயு 18:16, 2 கொரிந்தியர் 13:1)

• ஒருவன் எந்த அக்கிரமத்தையாவது எந்தப் பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட்டால், ஒரே சாட்சியினால் நியாயந்தீர்க்கக்கூடாது; இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்படவேண்டும்.

## நான்கு வகையான முன்னடையாளங்கள் (முன்மாதிரியானவைகள்)

### I. முன்னடையாளமான நபர்கள்:

1. ஆதாம் இனி வரப்போகிற கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாக இருந்தார் (ரோ 5:12-21; 2 கொரி. 15:45-49).
2. மெல்கிசேதேக்கு கிறிஸ்துவின் நித்திய ஆசாரிய முறைமைக்கு ஒரு முன்னடையாளமாக இருந்தார் (ஆதி. 14:18-24; எபி. 5:5-9; 6:20; 7:1-10, 17); ஒரு வகையான ஆசாரியத்துவமும் அரசாட்சியும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு முன் அடையாளம் (எபி:7:1-3 உடன் சக:6:12-13); மற்றும் நித்தியமாய் வீற்றிருப்பதற்கான ஒரு முன் அடையாளம் (எபி:7:3, 6 உடன் மீகா: 5:1-2; யோவா: 1:1-3; எபி:1:8).
3. ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தன்னுடைய குமாரனை பலியாக அளிப்பது, தேவன் தன்னுடைய ஒரே பேரான குமாரனை பலியாக அளிப்பதற்கு முன் அடையாளமாக இருக்கிறது (ஆதி. 22; யோவா. 3:16; எபி. 11:17-19).
4. ஈசாக்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஒரு முன்னடையாளமாக இருக்கிறார். (ஆதி. 22; எபி. 11:19).
5. கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளமாக, மோசே தேவனுடைய தீர்க்கதரிசியாகவும் உண்மையுள்ளவராகவும் இருந்தார் (உபாகமம் 18:15-19; அப்போஸ்தலர் 3:19-26), (எபி. 3:1-6).

6. ஆரோன் கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவத்தின் ஒரு முன்னடையாளமாக இருக்கிறார். (எபி. 5:1-5).
7. யோனா கிறிஸ்துவின் மரணம், அடக்கம், கீழ் இறங்குதல் ( மூன்று நாட்கள் பூமியின் தாழ் இடங்களுக்குள்) மற்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு ஒரு முன்னடையாளமாக இருக்கிறார். (யோனா 2; மத். 12:40; எபி.4:8-10)

**II. முன்னடையாளமான சம்பவங்கள்:**

1. வெள்ளம் ஞானஸ்நானத்திற்கு ஒரு முன்னடையாளமாக இருக்கிறது. (1 பேதுரு 3:20-21).
2. இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த போது ஏற்பட்ட சில சம்பவங்கள் கிறிஸ்து எதிர்கொள்ள (சந்திக்க) வேண்டிய சில காரியங்களுக்கு முன்னடையாளமாக இருக்கிறது (2 கொரி. 10:1-13).
3. வனாந்தரத்தில் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பமானது, கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு உயர்த்தப்பட்டதற்கும், மற்றும் சிலுவையின் நன்மையை மற்றவர்கள் உணர்ந்து கொள்ளும்படிக்கும் ஒரு முன் அடையாளமாகவும் இருந்தது (யோவா. 3:14; எண். 21).

**III. முன்னடையாளமான செயல்கள்:**

1. யாத்திராகமம் 17-ல் உள்ளபடி கன்மலையை அடித்தல் என்பது, கிறிஸ்து மனிதர்களுக்காக சிலுவையில் அறையப்படுதல் அல்லது அடிக்கப்படுதல் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது (2 கொரிந்தியர் 10:4).
2. இரண்டாம் தரம் கன்மலையை பார்த்து பேசுவதற்கு பதிலாக கன்மலையை அடித்தல் என்பது கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறையப்படுவதற்கு அடையாளமாக இருக்கிறது (எண். 20; 2 கொரி. 10:4; எபிரேயர் :6:6).
3. பிரதான மூளை கல்லை புறக்கணித்தல் என்பது கிறிஸ்துவை புறக்கணிப்பதற்கு முன் அடையாளமாக இருக்கிறது (ஏசாயா 28:16; மத்தேயு 21:42).
4. ஆசரிப்புக் கூடாரத்தின் ஆராதனை முறைமையில் ஆசாரியர்களின் செயல்கள் கிறிஸ்துவின் மூலம் மீட்பை குறித்ததான பல்வேறு அம்சங்களின் முன் அடையாளமாக இருக்கிறது: மிருகங்களை கொல்லுவது, இரத்தம் சிந்துதல் மற்றும் தெளித்தல் தூபம் காட்டுதல், சமூகத்து அப்பம், குத்துவிளக்கு மற்றும் ஆண்டுதோறும், அனுதினமும் நடக்கிற சடங்காச்சாரங்கள் இவை அனைத்தும் கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றப்பட்டதும் மற்றும் அவருடைய மீட்பின் கிரியைக்கு முன் அடையாளமான செயல்கள் (எபிரேயர் 7:11-28; 8:1-6; 9:1-28; 10:1-22).

**IV. முன்னடையாளமான நிறுவனங்கள்:**

1. காணிக்கை மற்றும் ஆராதனை முறைமை பற்றியதான மோசேயின் முழு நிறுவன அமைப்பு வரப்போகிற காரியமாகிய பலி, கிறிஸ்துவின் மீட்பின் கிரியை மற்றும் தேவனை மெய்யான வழியில் ஆராதனை செய்கிற காரியங்களுக்கு முன் அடையாளமாக இருக்கிறது. (யாத்திராகமம்: 12-13; 25:1 - 40:38; எபிரேயர் :7 -10).
2. ஆரோனின் ஆசாரிய முறைமை ஆசாரியர்களின் வஸ்திரங்கள் மற்றும் நியாயப்பிரமாண ஊழியத்தின் அம்சங்கள் யாவும் கிறிஸ்துவுக்கும் அவருடைய மீட்பின் கிரியைகளுக்கு முன் அடையாளமாக இருக்கிறது (யாத்திராகமம். 28-29; எபிரேயர்: 7-10).

3. இஸ்ரவேல் மக்களின் ஓய்வுநாள் என்பது, கிறிஸ்துவுக்குள் மீட்கப்பட்ட யாவருக்கும் வரப்போகிற நித்திய இளைப்பாறுதலுக்கு ஒரு முன் அடையாளமாக இருக்கிறது (யாத்திராகமம் 20:8-11; 31:12-18; உபாகமம் 5:15; எபிரேயர்: 4: 1 - 10).
4. இஸ்ரவேலின் பண்டிகைகள் கிறிஸ்துவின் மூலம் உண்டாகும் மீட்பின் பல்வேறு அம்சங்களின் முன் அடையாளமாக இருக்கிறது ( யாத்திராகமம் 12; லேவியராகமம் :23; 2 கொரி. 5:7; எபிரேயர் 5-10).
5. ஆலயம் மற்றும் அதில் செய்யப்படும் எல்லா ஆராதனை சடங்குகளும், ஆசரிப்புக் கூடாரம் மற்றும் அதின் ஆராதனை முறைமைக்கும் ஒத்த காரியமாகவும் முன் அடையாளமாகவும் இருக்கிறது.
6. ஆசரிப்புக் கூடாரம் மற்றும் ஆலயம், அதன் அறைகள் மற்றும் அதன் பொருட்கள், யாவும் கிறிஸ்து பிரவேசித்த பரலோக ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன் அடையாளமாக இருக்கிறது (எபிரேயர் :8:1-5; 9:1-10, 23-24).